யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை- 2015
## Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | விவசாய விஞ்ஞானம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

01) விவசாயி ஒருவருக்கு குறித்த அளவுக்கு மேலாக விவசாயக் காணிகளை வைத்திருக்கக்கூடாது என்பதனை வலியுறுத்தும் சட்டம்
(1) நீர்ப்பாசனச் சட்டம்
(2) நெற்காணிச் சட்டம்
(3) கமநல அபிவிருத்திச் சட்டம்
(4) காணி மறுசீரமைப்புச் சட்டம்
(5) தேசிய சுற்றாடல் சட்டம்

02) தன்னியக்க மழைமானியில்
(1) சாதாரண அளக்கும் சாடியினைப் பயன்படுத்தி மழைவீழ்ச்சி அளவீடு செய்யப்படும்
(2) மழை கிடைத்த நேரத்தினை அளவீடு செய்ய முடியாது
(3) மழை வீழ்ச்சியின் செறிவினை அறியலாம்
(4) மழைவீழ்ச்சியினை திருத்தமாக அளவீடு செய்யலாம்
(5) சிறிய மழைவீழ்ச்சிப் பெறுமானங்களையும் திருத்தமாக அளவிடலாம்

03) வளிமண்டல சாரீரப்பதனை நேரடியாக அளவீடு செய்யும் உபகரணம்
(1) ஈர உலர் குமிழ் வெப்பமானி
(2) ஈரமானி
(3) ஆவியாதல் தட்டு
(4) வளிமண்டல வெப்பமானி
(5) சூரிய ஒளிர்வு மானி

04) சாரீரப்பதன் அதிகரிக்கும் போது
(1) மகரந்த மணிகள் விரைவாக உலர்வடையும்
(2) நோய் மற்றும் பீடைத்தாக்கம் அதிகரிக்கும்
(3) தாவரங்களில் ஆவியுயிர்ப்பு அதிகரிக்கும்
(4) இலை மரக்கறிப் பயிர்களின் புதுத்தன்மை குறைவடையும்
(5) வித்துக்களின் வாழ்தகவு அதிகரிக்கும்

05) தாவரங்களுக்குத் தேவையான அத்தியாவசிய மூலகங்களுள் அதிகளவில் தேவைப்படுவது
(1) C, H, S (2) Ca, P, N (3) K, N, Cl
(4) Zn, Fe, Cu (5) N, P, K

06) தாவரங்களுக்கு அதிகளவு N பசளை இடுவதனால் ஏற்படக்கூடிய விளைவாகக் கருதப்பட முடியாதது
(1) இலை சாற்றுத் தன்மையாக காணப்படல்
(2) தாவரங்கள் இலகுவில் நோய்த் தாக்கத்துக்கு உட்படும்
(3) தாவரங்கள் இலகுவில் பீடைத் தாக்கத்துக்கு உட்படும்
(4) தாவரங்களின் வீரியத் தன்மை அதிகரிக்கும்

(5) உற்பத்தியின் போது அதிக செலவு ஏற்படும்

07) அமிலத் தன்மையான மண்ணில் தாவரங்களுக்கு நச்சுத் தன்மையை ஏற்படுத்தக்கூடிய மூலகங்களாவன

(1) Fe, Mn (2) Al, Cl (3) Zn, P

(4) Fe, B (5) Ca, P

08) மண்ணில் இருந்து சேதனப்பொருள் அகற்றப்படுவதனால்

(1) மண்ணில் தாங்கற்றன்மை குறைவடையும்

(2) மண் அமிலத்தன்மை அடையும்

(3) மண்ணில் அதிகளவு காற்றுவாழ் நுண்ணங்கிகள் பெருக்கமடையும்

(4) மண்ணில் நீர்வடிப்பு அதிகரிக்கும்

(5) மண்ணில் கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவு அதிகரிக்கும்

09) மண் தரம் குன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக குறிப்பிட முடியாதது

(1) முறையற்ற வடிகாலமைப்பு

(2) மண் மாசடைதல்

(3) மண் ஈரலிப்புக் குறைவடைதல்

(4) Cd, Pt போன்ற அயன்கள் மண்ணில் இருந்து அகற்றப்படல்

(5) மண் உவர்த்தன்மை அடைதல்

10) மண் உருவாக்கத்தின் போது

(1) சாய்வு கூடவான பிரதேசங்களில் உருவாக்கப்படும் மண்ணின் ஆழம் அதிகமாகும்.

(2) சாய்வான பிரதேசமாயின் முதிர்ச்சி அடைந்த மண் மேற்பகுதியில் காணப்படும்.

(3) கிழக்கு நோக்கி இருக்குமாயின் விரைவில் மண் உருவாக்கப்படும்.

(4) அதிக மழைவீழ்ச்சி கிடைக்குமாயின் மண் காரத் தன்மை அடைகின்றது.

(5) உயிரியற் காரணிகள் ஒப்பீட்டளவில் குறைந்தளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

11) மண்ணில் உக்கலானது

(1) ஊடுபுகவிடும் இயல்பை அதிகரிக்கும், மண்ணில் நீர்பற்றுதிறனை அதிகரிக்கும், மண் காற்றூட்டலைக் குறைக்கும்.

(2) மண் காற்றூட்டலை அதிகரிக்கும், மணி உருவாதலைக் குறைக்கும், நுண்ணங்கித் தொழிற்பாட்டைக் குறைக்கும்.

(3) மண்ணில் நீர்பற்றுதிறனை அதிகரிக்கும், மண் காற்றூட்டலைக் குறைக்கும், நுண்ணங்கித் தொழிற்பாட்டைக் குறைக்கும்.

(4) மண் தூர்வைத் தன்மையைக் குறைக்கும், மண்ணில் நீர்பற்றுதிறனை அதிகரிக்கும், மண் திரள்களை உருவாதலை அதிகரிக்கும்.

(5) ஊடுபுகவிடும் இயல்பை அதிகரிக்கும், மண் காற்றூட்டலை அதிகரிக்கும், மண் திரள்கள் உருவாதலை அதிகரிக்கும்.

12) மண் வளியின் கட்டமைப்பில் அதிகளவு செல்வாக்குச் செலுத்தும் காரணியாகக் கருத முடியாதது

(1) மண்ணின் ஆழம்

(2) மண் தோற்ற அடர்த்தி

(3) மண்ணிலுள்ள புவியீர்ப்பு நீர்

(4) மண்ணின் நுண்டுளைத் தன்மை

(5) மண்ணின் இழையமைப்பு

13) பயிர்களை நாட்டுவதற்கு முன்னர் நான்கு சக்கர திராக்ரர்களினைப் பயன்படுத்தி மண்ணினைப் புரட்டுவதற்குப் பயன்படும் உபகரணம் ஆவது
   (1) நாட்டுக் கலப்பை
   (2) வட்டத்தட்டுக் கலப்பை
   (3) முட் கலப்பை
   (4) பர்மிய முட் கலப்பை
   (5) சுழல் கலப்பை

14) பூச்சியப் பண்படுத்தல் தொடர்பான கூற்றுக்களுள் தவறானது
   (1) பெரிய வித்துக்களைக் கொண்ட பயிர்களுக்குப் பொருத்தமானது
   (2) அதிகளவில் களை நாசினி பயன்படுத்தப்படும்
   (3) மண்ணின் கூறுகள் காக்கப்படும்
   (4) அதிகளவு மண்ணரிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களுக்குப் பொருத்தமானது
   (5) வித்து முளைதிறன் சதவீதம் அதிகம்

15) துளி நீர்ப்பாசனம் பற்றிய சில கூற்றுக்கள் இங்கே தரப்பட்டுள்ளது.
   A - பல்லாண்டுப் பயிர்களுக்கு மிகப் பொருத்தமானது
   B - செலவு உயர்வானது
   C - நீர்ப்பாசன வினைத்திறன் அதிகம்
   மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியானது / சரியானவை
   (1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B ஆகியன
   (4) A, C ஆகியன (5) A, B, C ஆகியன

16) நீர் வடிப்பின்மை தொடர்பான கூற்றுக்களுள் தவறானது
   (1) பொசுபரசு, பொட்டாசியம் போன்ற மூலகங்களின் கிடைப்புத் தன்மை குறைவடையும்.
   (2) தாவர வேர்கள் மேற்பரப்பில் கோளவுருவான வளர்ச்சி அடையும்.
   (3) சேதனப் பொருட்களில் இருந்து சேதன அமிலங்கள் தோன்றும்.
   (4) விவசாய உபகரணங்களைப் பயன்படுத்துவது இலகுவானது.
   (5) மண் உவர்ப்புத் தன்மை அதிகரிக்கும்.

17) மூசல வகைப் பம்பிகள்
   (1) நீண்டகாலத்துக்குப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.
   (2) குறைந்தளவு எரிபொருள் போதுமானது.
   (3) பராமரிப்புச் செலவு குறைவாகும்.
   (4) ஒப்பீட்டளவில் குறைந்தளவு இடவசதி போதுமானது
   (5) ஆரம்பச் செலவு குறைவானது

18) பதி வைத்தல் மூலம் கிடைக்கும் தாவரங்கள்
   (1) அதிகளவு விளைச்சலைத் தரக்கூடியவை.
   (2) வரட்சி போன்ற பாதகமான நிலைமைகளை சகித்து வளர முடியாதவையாக இருக்கும்.
   (3) பராமரிப்பது கடினமாகும்.
   (4) விளைச்சலை உருவாக்க நீண்ட காலம் செல்லும்
   (5) ஆழமான பரந்த வேர்த்தொகுதி கொண்ட ஒட்டுக்கட்டை தேவைப்படும்.

19) இழைய வளர்ப்பின் போது ஊடகத்தைத் திண்மமாக்கும் கருவி
   (1) ஏகார் (2) சுக்கிரோசு (3) குளுக்கோசு

(4) சைற்றோக்கைனின் (5) குளுற்றமின்

20) சோயா வித்துக்களை நாட்ட முன்னர் அவ் வித்துக்களை
(1) உரோஞ்சுதல் வேண்டும்
(2) கிருமி புகுத்தல் வேண்டும்
(3) வித்துறையை அகற்றல் வேண்டும்
(4) வன்மையாக்க வேண்டும்
(5) கவசமிட வேண்டும்


21) நெரிடோக்கோ நாற்று மேடை
(1) சிறிய வித்துக்களை உடைய பயிர்களுக்குப் பொருத்தமானது.
(2) தக்காளி, கத்தரி, புகையிலை போன்ற நாற்றுக்களை உருவாக்குவதற்குப் பயன்படும்.'
(3) பூசணி மற்றும் பயிற்றை போன்றவற்றைப் பயிரிடுவதற்கு உதவும்.
(4) தாழ்நில நெற்செய்கையின் போது பயன்படுத்தப்படும்
(5) பெரும் போகத்தில் வெண்டி மற்றும் புகையிலை நாற்றுக்களை உருவாக்குவதற்குப் பயன்படும்.

22) கலப்புப் பிறப்பாக்க வித்துக்கள் தொடர்பான கூற்றுக்களுள் தவறானது
(1) முதலாம் சந்ததி உயர்தரமாக இருக்கும்.
(2) இவற்றின் உற்பத்திக்கு அதிக செலவு ஏற்படும்.
(3) கல்சியம் அல்ஜினேற்றினால் கவசமிடப்படுகின்றது.
(4) கலப்புப் பிறப்பு உரண் கொண்டவையாக இருக்கும்.
(5) அகப் பிறப்பாக்கமடையும் சந்தர்ப்பத்தில் வீரியமான வித்துக்களைப் பெறலாம்.

23) இலங்கையில் அதிகளவில் பயன்படுத்தப்படும் ஆளுகைக் கட்டமைப்பு
(1) பசுமை இல்லம்
(2) கண்ணாடி இல்லம்
(3) வரிச்சு இல்லம்
(4) கயிற்று இல்லம்
(5) பொலுத்தீன் கூடாரம்

24) மண்ணின்றிய பயிர்ச்செய்கை தொடர்பான கூற்றுக்களுள் தவறானது
(1) ஆளுகைக் கட்டமைப்புக்களில் பயிரிடுவதனால் போகம் அல்லாத காலங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.
(2) நோய் மற்றும் பீடைக்கு எதிர்ப்புத் தன்மை உள்ள தாவரங்களை உருவாக்குகின்றது.
(3) மண் தொடர்பாக ஏற்படக்கூடிய Bacteria, Fungas மற்றும் Nematoda போன்ற நோய்கள் ஏற்படுவதில்லை.
(4) இளைஞர்களை விவசாயத்தினை நோக்கி கவருகின்றது.
(5) இலை மரக்கறி மற்றும் மரக்கறி போன்ற பயிர்களுக்கு பொருத்தமானது.

25) மண்ணின்றிய பயிர்ச்செய்கைக் கட்டமைப்பு ஒன்று இங்கே தரப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பானது



(1) ஆழங் குறைவான போசணைப் படல நுட்பமுறை
(2) ஆழ் போசணைப் பாய்ச்சல் நுட்பமுறை
(3) ஒற்றைத் தட்டு ஆழ்போசணை முறை
(4) கிடையாக வைக்கப்பட்ட பயிர்ச்செய்கை முறை

(5) நீண்ட சால்களிலான பயிர்ச்செய்கை முறை

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education